
புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | டிசம்பர் 08, 2016 | புரட்சி 15 | முழக்கம் 47 | விலை: ரூ.3.00

### ஜன கண மன...

தேசபக்தியைதிரையரங்குகள் வழியாகத்தான் ஊட்டி வளர்க்க முடியும் என்ற உறுதியான முடிவுக்கு உச்சநீதி மன்றம் வந்திருக்கிறது.

இனி திரைப்படம் தொடங்குவதற்கு முன்பு திரையரங்க கதவுகளை இழுத்து மூடிவிட்டு திரையில் தேசியக் கொடியை காட்டி 'ஜன கண மன' பாடலை பாட வேண்டுமாம்! அப்போது எல்லோரும் எழுந்து நிற்க வேண்டுமாம்!

திரைப்படம் தொடங்குவதற்கு முன்பு புகைப் பிடிப்பது புற்று நோயை உண்டாக்கும்; மது அருந்துவது உடலுக்குக் கேடு தரும் என்ற விளம்பரங்கள் போடுவது கட்டாயப் படுத்தப்பட்டிருந்தது.

இந்த வரிசையில் "ஜன கண மன பாடுவது தேச பக்தியை வளர்க்கும்; அப்போது எழுந்து நின்றால், கால் வலி, மூட்டு உபாதை நீங்கும்" என்ற விளம்பரத்தையும் சேர்த்துக் கொள்ள லாம்!

இதேபோல் 'டாஸ்மாக்' கடைகள் நட்சத்திர ஓட்டல், மதுபான விடுதிகளில் ஜன கண மன' பாடலை திறக்கும் போதும், மூடும் போதும் ஒலிபரப்ப வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து விடுமோ? வேண்டாமய்யா... அங்கே 'குடிமக்கள்' எழுந்து நிற்க முடியாத நிலையில்கூட இருப்பார்கள் என்பதை நீதிபதிகள் கவலையோடு கவனத்தில் கொள்ள வேண்டும்.

உச்சநீதிமன்றத்திலேயே இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று ஒருவர் வழக்கு தொடர்ந்தார். ஆனால் நீதிபதிகள், இந்த மனுவை தள்ளுபடி செய்து விட்டனராம்.

நீதிபதிகளுக்குத்தான் ஏற்கனவே போதுமான அளவில் 'தேச பக்தி' இருக்கிறதே என்று நீதிபதிகள் கருதியிருக்கக் கூடும்.

ஜன கண மன' பாடலில் தேச ஒற்றுமையின் குறியீடாக 'சிந்து' நதி வருகிறது. ஆனால் அந்த நதி நீரை இனி பாகிஸ்தானோடு பகிர்ந்து கொள்ள பிரதமர் மோடி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அதுபோலவே பாடலில் இடம் பெறும் 'யமுனை' நதிநீர் பிரச்சினையிலும் மாநிலங்கள், நாடுகளுக்கிடையே சிக்கல்கள் இருக்கின்றன. தேச ஒற்றுமையை வலியுறுத்தும் பாடல் வரிகளிலேயே ஒற்றுமை இல்லையே என்று, ஒரு நண்பர் சுட்டிக் காட்டுகிறார்.

கேள்வி நியாயம்தான். இதையெல்லாம் கேட்டால் 'தேச விரோதி' என்று முத்திரை குத்தி விடுவார்கள்.

சரி, போகட்டும். கடைசியாக ஒரு யோசனை. தியேட்டர்களில் 'ஜன கண மன' பாடல் ஒலிக்கும் போது எழுந்து நிற்காமல் இருப்பவர்களை 'கண்காணித்து' அவர்கள் மீது தேச விரோத நடவடிக்கை எடுக்க ஒரு கண்காணிப்புக் குழுவையும் உச்சநீதிமன்றம் நியமித்தால் தேச பக்தியை இன்னும் 'கறாராக' காப்பாற்ற முடியுமே.

யோசியுங்கள்!

– கோடங்குடி மாரிமுத்து

## டிச.24 சேலம் மாநாட்டு சிந்தனை

# வேத மரபுகளை மறுப்போம்; வெகுமக்கள் உரிமை மீட்போம்!

பெரியார் நினைவு நாளில் டிசம்பர் 24இல் சேலத்தில் திராவிடர்விடுதலைக் கழகம் வேத மரபு மாநாட்டை நடத்துகிறது. "வேத மரபை மறுப்போம்; வெகுமக்கள் உரிமை மீட்போம்" என்பதே மாநாட்டின் முழக்கம். வேத பார்ப்பனிய மரபு சமூகத்தை ஒடுக்கி வந்த வரலாறுகளை பல்வேறு கருத்தாளர்கள் விரிவாகப் பேச இருக்கிறார்கள்.



வேதங்கள் கற்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அதற்கு எதிர்ப்பான சிந்தனைகள் சமூகத்தில் உருவாகியே வந்திருக்கின்றன. ஆனால் பார்ப்பனியம் அந்த எதிர்ப்புகளை சூழ்ச்சியால், அழிப்பால், இருட்டிப்பால், ஊடுருவலால் வீழ்த்தியது என்பதே கொடூரமான வரலாறு.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 'இந்து' என்ற பெயரில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது பார்ப்பனியம். வேத பார்ப்பனிய மரபுகளால் அடிமைகளாக்கப்பட்ட, உருக்குலைக்கப்பட்ட மக்களை தனது கட்டுப்பாட்டில் உறுதிப்படுத்திக் கொண்டது. அதற்கு சட்டப் பாதுகாப்பையும் தேடிக் கொண்டது. இந்து மதம் என்ற பெயரில் நமது மக்கள் மீது பார்ப்பனியம் திணித்த அடக்குமுறைகளை எதிர்க்கும் போதெல்லாம், "பார், பார்- இந்துக்களின் விரோதிகளைப் பார்" என்று பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத வெகுமக்களை உசுப்பி விடுகிறார்கள். சமூக வரலாறுகளை அறிந்திடாத நமது மக்களில் சிலர் பார்ப்பனர்கள் விரிக்கும் சூழ்ச்சி வலையில் விட்டில் பூச்சிகளாக வீழ்ந்து விடுகிறார்கள். 'என்னுடைய இந்து மதத்தையா எதிர்க்கிறாய்?' என்று கொதிக்கிறார்கள்.

வேத மரபுகளின் பார்ப்பனியத்தைப் பாதுகாத்துக் கொள்வதே பார்ப்பனர்கள் முன்வைக்கும் 'இந்துமத எதிர்ப்பு' என்ற உண்மையை நமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்! இதை ஒரு மக்கள் இயக்கமாகவே நடத்த வேண்டும். அதற்கான தொடக்கம்தான் சேலத்தில் நடக்கும் வேதமரபு மறுப்பு மாநாடு.

- வேதம் என்பதுதான் என்ன? அது எழுத்து வடிவில் எழுதப்பட்டது இல்லை. காதாலே கேட்கப்பட்டு வந்தது. எனவே அதை 'சுருதி' என்றார்கள். சுருதி என்றால், எழுதப்படாமல் கேட்கப்படுவது.
- வேதகாலக் கடவுள்கள் எப்படி இருந்தன? மனிதர்களில் ஒருவராகவே வேதகாலக் கடவுள்கள் கற்பனை செய்யப் பட்டிருந்தன. கடவுளை நண்பனாகவும், தங்களோடு ஒன்றாக சாப்பிட்டு ஒன்றாக உறங்குகிறவர்களாகவுமே வேதங்களின் 'சுருதி'கள் கூறின.
- மனிதர்களுள் மனிதர்களாக தொடக்கத்தில் இருந்த வேதக் கடவுளர்களை பிறகு பார்ப்பனர்கள், விண்ணில் வாழும் கடவுளாக மாற்றினார்கள். தரையிலிருந்த கடவுள், மேலே வானத்துக்கு மாற்றப்பட்டதால் கடவுள்களுக்கு பூமியிலிருந்து 'படையல்'களை எடுத்துச் செல்லும் 'சக்தி' மிக்க தரகர்கள் தேவையானார்கள். அந்த சக்தி தங்களுக்கும் தங்கள் வேத மந்திரத்துக்கும் மட்டுமே உண்டு என்று பார்ப்பனாகள் நமது மக்களை நம்ப வைத்தார்கள். அப்போதுதான் 'புரோகித வர்க்கம்' உருவானது.
- அடுத்து, தங்களால் மட்டுமே 'விண்ணுலகக் கடவுள்களிடம்' தொடர்பு கொள்ள முடியும் என்ற புரட்டை மக்களிடம் நம்ப வைக்க வேண்டும் அல்லவா? அதற்காக பார்ப்பனர்கள் 'மாயாஜாலக் கதைகளை' உருவாக்கினார்கள். வேதங்களை ஓதி யாகங்களை நடத்தினால் கடவுள்களை பணிய வைக்க முடியும். கடவுள் மனம் மாறுவார் என்று நம்ப வைத்தார்கள். வேத காலத்தில் தொடங்கிய இந்த பார்ப்பன சூழ்ச்சி, இப்போது 'அப்போலோ மருத்துவமனை' காலம் வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது என்றால் வேத பார்ப்பன மரபு எப்படி ஆதிக்கம் பெற்று நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.
- வேத மரபு வழியாக தங்களின் ஆதிக்கத்தைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டு வரும் பார்ப்பனர்கள், அதற்காக வேதக் கடவுள்களை தூக்கிக் குப்பைக் கூடையில் வீசவும் தயங்கவில்லை. வேத காலத்திலேயே பார்ப்பனர்கள் வேதக் கடவுள்களை மறுத்து, தூக்கி எறிந்தார்கள். அதே பார்ப்பனர்கள்தான் இப்போது கடவுள் மறுப்பாளர்களை "கடவுளை நிந்திக்கிறார்கள்; இந்து மதத்தைப் புண்படுத்து கிறார்கள்" என்று கூப்பாடு போடுகிறார்கள்.
- ரிக் வேதத்தில் தியோசன், மித்திரன், சாவித்திரி, பூசன், ஆதித்தியன், மாருத்தியன், அதிதி, திதி, ஊர்வசி போன்ற கடவுள்கள் கூறப்பட்டன. பூமியிலிருந்த 'கடவுளை' பார்ப்பன புரோகிதர்கள் 'விண்ணுக்கு' மாற்றிய பிறகு, இந்தக் கடவுள்கள் புரோகித கூட்டத்தின் பிழைப்புக்கு பயனில்லலாமல் போய்விட்டன. எனவே கடவுளையே மாற்றினார்கள். அவர்கள் 'தகுதி'யையும் மாற்றினார்கள். எப்படி?
- 'ருத்திரனை', 'மகாதேவன்' என்று உயர்த்தி அவனுக்கு, 'சிவன்' என்று பெயர் சூட்டினார்கள். தங்களின் 'யாக சக்தி'யை நம்ப வைக்க சிவனைப் பயன்படுத்தினார்கள். 'யாக குண்டம்' நடக்கும் இடத்தில் சிவன் கருப்பு உடை தரித்து தோன்றி, 'யாக குண்டங்களில்' எரிக்கப்படும் உணவுப் பொருள், வாசனை திரவியங்களை சிவன் தன்னிடமே ஒப்படைக்க வேண்டும் என்று உரிமை கொண்டாடுகிறான் என்று கதை விட்டார்கள். சிவனைத் தொடர்ந்து 'விஷ்ணு'வை யாக சாலைக்கு இழுத்து வந்தார்கள். அனைத்து முக்கியமான யாகங்களிலும் வேதங்கள் ஓதும்போது 'விஷ்ணு' பங்கேற்கிறான் என்று கதை கட்டினார்கள்.
- 'சிவன்' பங்கு கேட்கிறான்; எனவே யாகப் பொருள்கள் சிவனுக்கு போய்ச் சேர வேண்டும் என்று கூறி, யாகங்களில் குவிந்த உணவுப் பொருள்களை தானியங்களை வாரிச் சுருட்டி ஏப்பம் விட்டார்கள். அதன் காரணமாக உற்பத்திப் பொருள்களின் பெரும் பகுதி பார்ப்பனரிடம் குவிந்தது; புரோகித வர்க்கம் செல்வாக்குப் பெற்றது. 'பண்பாட்டுக் காவலர்களாக' தன்னை நிலைநிறுத்திக் கொண்டது; தனித்த உரிமைகளுடன் வலம் வரத் தொடங்கியது.
- சமூக ஆதிக்கவாதிகளாக மாறியவர்கள், பிறகு சமூக அதிகாரத்தைக் கைப்பற்ற திட்டமிட்டார்கள். எப்படி?
- ஆதி காலத்தில் சமூகம் இயற்கையின் சீற்றங்களை கட்டுப் படுத்தி, உயிர் வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்ளவே விரும்பியது. மந்திரங்கள், சடங்குகளாலேயே கட்டுப்படுத்தி விடலாம் என்று முதலில் நம்பியது. காலப்போக்கில் இயற்கையின் இயங்கும் தன்மைகளையும், அதன் விதிகளையும் புரிந்துக் கொள்ளத் தொடங்கினார்கள். இயற்கை செயல்படும் 'காரண-காரியங்களை' புரியத் தொடங்கிய மனித சமூகம், இயற்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் இறங்கியது. அதற்கான ஆற்றலைப் பெற்றது. உலகம் முழுதும் ஆதிகால சமூகம் இப்படி அறிவியலை நோக்கி திரும்பியபோது அந்த மாற்றம் இங்கே மட்டும் நிகழாமல், புரோகிதப் பார்ப்பனர்கள் திட்டமிட்ட சூழ்ச்சிகளை அரங்கேற்றினார்கள். இயற்கையின் 'விதி'களை அறிவியலுக்கு உட்படுத்த விடாமல் தங்களின் புரோகித மந்திரங்களாக மாற்றியதுதான் வரலாற்றில் பார்ப்பனர்கள் இழைத்த மகத்தான சமூக துரோகம். இன்று வரை 'மழை பெய்வதற்கும்', 'உலக நன்மைக்கும்', 'முதலமைச்சர் உடல்நிலை தேறுவதற்கும்' பார்ப்பனர்கள் வருண ஜெபத்தையும், யாகங்களையும் நடத்தி வருவதிலிருந்தே இந்த வரலாற்று உண்மையை புரிந்து கொள்ளலாம்.
- அறிவியலை 'புரோகிதத்துக்குள்' முடக்கியதால் சமூக மாற்றங்கள் முடங்கிப் போயின. புராதன சமூகம்

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

# அடுத்து....?



தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாகத் திகழ்ந்த முதலமைச்சர் ஜெயலலிதா முடிவெய்திவிட்டார். ஆளுமைத் திறன் கொண்ட ஒரு பெண்ணாக தன்னை உயர்த்திக் கொண்டவர். பெண்களால் ஆட்சி சக்கரத்தை வலிமையோடு நகர்த்திச் செல்ல முடியும் என்று நிரூபித்தவர்.

தான் வழி நடத்திய கட்சிக்கு அவர் சர்வாதிகாரியாகவே செயல்பட்டார். அவரது விரல் அசைப்புக்கு அவரது அமைச்சர்களும், கட்சிப் பொறுப் பாளர்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடிபணிந்து நின்றனர். ஆண்கள் ஆதிக்கமே கொடிகட்டிப் பறக்கும் அரசியல் உலகில் இது ஓர் அபூர்வக் காட்சி. கருத்து மாறுபாடு களையும் கடந்து பெண்களின் இத்தகைய ஆளுமைத் திறமையை பெரியார் பாராட்டியிருக்கிறார்.

இந்தியாவின் பிரதமராக இந்திரா காந்தி இருந்தபோது அவரது கொள்கையில் முரண்பாடுகள் இருந்தாலும்கூட ஒரு பெண் நாட்டை நிர்வகிக்க முடியும் என்பதற்கு பெருமையாக சான்று காட்டி, பெரியார் பேசினார். சுயமரியாதைத் திருமணம் பற்றிய பெரியார் உரையில் (அது பிறகு ஒலித் தட்டாகவும் வெளி வந்தது) இந்தக் கருத்து இடம் பெற்றுள்ளது.

69 சதவீத இட ஒதுக்கீடு கொள்கைக்கு நெருக்கடி வந்தபோது அதை உறுதியுடன் எதிர்த்து சமூக நீதியை காப்பாற்றினார். காஞ்சி ஜெயேந்திரனை கொலை வழக்கில் கைது செய்து சிறையில் வைத்தார். ஆனாலும் அவர் வழி நடத்திய அ.இ.அ.தி.மு.க. திராவிடர் இயக்கத்தின் அடியொற்றியது அல்ல; மதங்களைக் கடந்த 'திராவிடர்' அடையாளத்தை திராவிடர் இயக்கம் வழங்கியது. ஆனால் மறைந்த ஜெயலலிதா, தனது கட்சியை மதத்துடன் இணைத்து இதற்கு இந்து மத அடையாளத்தைப் போர்த்தினார். இது திராவிடர் இயக்கக் கொள்கைக்கு நேர் எதிரானது. சமூகத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்லக் கூடியது.

இப்போது அ.இ.அ.தி.மு.க.வை வழி நடத்தும் சக்தி வாய்ந்த தலைமை இல்லை. ஆனாலும் அக்கட்சி அடுத்த முதல்வரை தேர்வு செய்வதில் எவ்விதக் குழப்பமுமின்றி மாற்றங்களை சுமூகமாக நிகழ்த்திக் காட்டியிருப்பதை வரவேற்க வேண்டும்.

அதே நேரத்தில் அக்கட்சியிலும் ஆட்சியிலும் உருவாகியுள்ள தலைமை வெற்றிடத்தை மத்தியில் ஆளும் பா.ஜ.க. தனது அதிகார வலிமையைப் பயன்படுத்தி, இந்துத்துவ அரசியலுக்குள் 'உள்ளிழுக்கும்' சதித் திட்டங்கள் அரங் கேற்றப்படலாம். இதற்கான வாய்ப்புகள் இல்லை என்று புறக்கணித்துவிட முடியாது. இந்த இக்கட்டான சூழலை தற்போதைய அ.இ.அ.தி.மு.க. எப்படி எதிர்கொள்ளப் போகிறது என்பது இப்போது எழுந்துள்ள கேள்வி.

பண்பாட்டுத் தளத்தில் ஜெயலலிதா ஒரு இந்துத்துவாதியாக தனது கட்சியை வழி நடத்தினாலும் தனது அரசியல் அதிகார வரம்புக்குள் பா.ஜ.க. தலை யீட்டை உறுதியாக தடுத்து நிறுத்தியே வைத்தார். மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் தனக்கு பேசுவதற்கு உரிய நேரம் ஒதுக்காதபோது அதை எதிர்த்து வெளி நடப்பு செய்த போதும் சரி; காவிரி மேலாண்மை வாரியம் நியமிப்பதில் பா.ஜ.க. அரசின் நேர்மையற்ற செயல்பாட்டைக் கண்டித்த போதும் சரி; பல்வேறு நேரங்களில் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

மாநில அரசுகளின் உரிமைகளில் தலையிடக் கூடிய, மத்திய அரசின் மின் திட்டம், வரி விதிப்புத் திட்டங்களை ஏற்க மறுத்தவர். தமிழகத்தின் உரிமைகளுக் காக அவர் மத்தியிலிருந்த ஆட்சிகளை அது காங்கிரசானாலும் பா.ஜ.க.வானா லும் சமரசமின்றி எதிர்த்துப் போரா டியதே அவரது அரசியல் வரலாறாக இருந்திருக்கிறது. அவரது அந்த அணுகுமுறையிலிருந்து தமிழகத்தின் புதிய ஆட்சி விலகிச் சென்றுவிடக் கூடாது என்று தமிழர்கள் நலக் கண்ணோட்டத்தில் சுட்டிக் காட்ட வேண்டியது நமது கடமையாகும். அக்கட்சியின் ஆட்சிப் பொறுப்பை நடத்திச் செல்வோரும் கட்சியின் பொறுப்பாளர்களும் இதில் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டிய தருணம் இது.

அதேபோல ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசு மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினைக்கு வாக்கெடுப்பு நடத்தி முடிவு எடுக்க வேண்டும் என்று அவர் கொண்டு வந்து நிறைவேற்றிய சட்டமன்றத் தீர்மானங் களும், ராஜீவ் கொலை வழக்கில் 7 தமிழர் விடுதலை கோரி அவர் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பும் உயிருடனேயே இருக்கின்றன.

முதல்வர் ஜெயலலிதா இல்லாத இந்த சூழலில் இந்தத் தீர்மானங்களுக்கு செயல்வடிவம் தருவதற்கு புதிய ஆட்சி முன்வர வேண்டும். அது மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு செலுத்தக் கூடிய சரியான மரியாதை அஞ்சலியாகவே அமையும்.

## கழகத் தோழர் பாரூக் மீதான குண்டர் சட்டம்: அறிவுரைக் குழுமம் இரத்து செய்தது

கோவையில் 22.9.2016 அன்று இந்து முன்னணி மாவட்ட செய்தி தொடர்பாளர் டிசசிக்குமார் என்பவர் அடையாளம் தெரியாத சிலரால் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவத்தை யொட்டி கோவை நகர் முழுதும் கலவரம், தீ வைப்பு, உடைமைகளை அழிப்பது என இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டார்கள். இதற்காக தமிழகம் முழுதுமிருந்தும் ஆட்கள் அழைக்கப்பட்டனர். காவல்துறை கைகட்டி வேடிக்கைப் பார்த்தது. அப்போது உக்கடம் பகுதி திராவிடர் விடுதலைக் கழகச் செயலாளர் பாரூக், குழந்தைக்கு பால் வாங்க வந்தபோது கலவரக்காரர்கள் சூறையாடல் நிகழ்ந்து கொண்டிருந்தது. காவல்துறை 'இந்து அமைப்பைச் சார்ந்த சிலரையும், இஸ்லாமியர்கள் சிலரையும் கணக்கு காட்ட கைது செய்தது. அதில் பால் வாங்க வந்த தோழர் பாரூக்கையும் கைது செய்து பின்பு அவர் மீது குண்டர் சட்டத்தையும் ஏவியது.

அதைத் தொடர்ந்து குண்டர் சட்ட விதிமுறை யின் கீழ் நவம்பர் 8ஆம் தேதி சென்னையிலுள்ள அறிவுரை குழுமத்தின் முன்பு பாரூக் நேர் நிறுத்தப் பட்டார். குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டது சட்டப்படி சரியல்ல என்று தோழர் பாரூக் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நீதிபதிகள் முன் வாதிட்டார். தோழர் கொளத்தூர் மணியின் வாதம் மற்றும் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த மனு ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கைப் பரிசீலித்து அறிவுரைக் குழுமம் பாரூக்கை விடுதலை செய்தது.

தோழர் பாரூக், குண்டர் சட்டம் இரத்தான செய்தியறிந்து சிறையிலிருந்தபடியே தன் குடும்பத்தாரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு செய்தியை தெரிவித்தார்.

## சித்தோட்டில் சட்ட எரிப்புப் போராளிகள் நினைவு நாள்

26.11.2016 சனிக்கிழமையன்று, திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக, சித்தோடு நான்கு முனைச் சந்திப்பில் மாலை 7.00 மணிக்கு "சட்ட எரிப்புப் போராட்டமும் பெரியார் தொண்டர்களின் தியாகமும்" என்கிற தலைப்பிலும், "பொது சிவில் சட்டத்தின் ஆபத்துகள்" என்கிற தலைப்பிலும் தெருமுனைப் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. யாழ். எழிலன் வரவேற்க, மாநில அமைப்புச் செயலாளர் ப. இரத்தின சாமி தலைமையேற்றும், இரா. கமலக்கண்ணன் முன்னிலை வகிக்கவும், தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி. வேலுச்சாமி, வீரா கார்த்திக் மற்றும் ஆசிரியர் சிவக்குமார் ஆகியோர் சிறப்பான உரையை நிகழ்த்தினர். வேணுகோபால், ராசண்ணன், சத்தியராஜ், சித்தோடு தோழர்கள் முருகேஷ், நடராஜ், சுப்பையா, முத்துசாமி, பிரபு, ரமேஷ், பள்ளி பாளையம், காஞ்சிக்கோயில் திருமூர்த்தி, அய்யப்பன், சாமியப்பன், அரங்கம்பாளையம் பிரபு, தமிழ்ச் செல்வன் ஆகியோர் பங்கேற்க மாவட்டப் பொருளாளர் பி.கிருஷ்ணமூர்த்தி நன்றியுரையுடன் நிகழ்ச்சி சிறப்புடன் முடிந்தது.

## மேட்டூரில் ஜாதி ஒழிப்பு தெருமுனைக் கூட்டம்

நவம்பர் 26 ஜாதி ஒழிப்பு வீரர்களின் நாளில் மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழக சார்பில் தெருமுனைக் கூட்டம் மேட்டூர் ஒர்க்சாப் கார்னர், பேருந்து நிலையம், நான்கு ரோடு, சின்னபார்க் ஆகிய இடங்களில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவின் ஜாதி ஒழிப்பு பாடல்கள் பாடப்பட்டன. தோழர்கள் சி. கோவிந்தராசு-சேலம் மேற்கு மாவட்ட செயலாளர், சுந்தர், குமரேசன் ஆகியோர் உரையாற்றினர். தோழர்கள் குமரப்பா, முத்துக்குமார், கிட்டு, அம்ஜத்கான், சீனிவாசன், முத்துராஜ், சுசீந்திரகுமார், ஆனந்த், அண்ணாதுரை, பழனி ஆகியோர் கலந்துகொண்டனர். பொது மக்களுக்கு துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ©9941613535
கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை, 'கரண்ட்' அக்கவுண்ட். எண் : 1257115000002041 – IFSC KVBL0001257

# இந்துவாக சாக மாட்டேன்!

கெடுவாய்ப்பாக, நான் ஒரு தீண்டத்தகாத இந்துவாகப் பிறந்து விட்டேன். அதைத் தடுப்பது என் சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனால், அருவருக்கத்தக்க இழிவான நிலையில் வாழ்வதை என்னால் தடுத்துக் கொள்ள முடியும். எனவே நான் உறுதியாகக் கூறுகிறேன்: நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்.

தனித்து இருந்த ஒரு நீர்த் துளி கடலிலே கலந்து, கரைந்து தன் இருத்தலைத் தொலைப்பது போல் ஒரு தனி மனிதன் சமூகத்தில் கரைந்து தன் முழுமையைத் தொலைத்துவிடுவதில்லை. மனிதன் சுதந்திரமானவன். அவன் இந்த சமூகத் திற்குத் தொண்டு செய்வதற்காகப் பிறக்க வில்லை. தான் மேம்பாடு அடைவதற் காகவே பிறந்தான். இந்தக் கருத்து புரிந்து கொள்ளப் பட்டதாலேயே வளர்ந்த நாடுகளி லெல்லாம் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை அடிமைப்படுத்திவிட முடிவ தில்லை. தனி மனிதனுக்கு எந்தவொரு பாத்திரமும் வழங்காத மதம் எனக்கு ஏற்புடையதில்லை. அதனால் தனி மனிதனை ஏற்றுக்கொள்ளாத இந்து மதம் எனக்கு ஏற்புடையதாயில்லை.

ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கல்வி பெற முடியும், இரண்டாம் வகுப்பினர் ஆயுதம் ஏந்தவும், மூன்றாவது வகுப்பினர் வாணிபம் செய்யவும், நான்காவது வகுப்பினர் அடிமைகளாக இருக்கவும் வேண்டும் என்று சொல்லும் எந்த மதத்தையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோருக்கும் கல்வி அவசியம், எல்லோருக்கும் ஆயுதம் அவசியம், எல்லோருக்கும் வாணிபம் செய்வது அவசியம். இந்த அடிப்படையை மறந்த மதம் ஒரு வகுப்பாருக்கு மட்டும் கல்வி கொடுத்து, பிறரை அறியாமை இருட்டில் தள்ளிவிடுவது மதமே அல்ல. அது அவர்களை எப்போதும் அடிமைகளாகவே வைத்திருப்பதற்கான (வஞ்சக) ஏற்பாடு...

ஒரு மதத்தின் அடிப்படையான கோட்பாடு என்பது, ஒரு தனி மனிதனின் ஆன்ம வளர்ச்சிக்கு ஏதுவான சூழலை உருவாக்கித் தருவதே. இதை நீங்கள் ஒப்புக்கொண்டால் இந்து மதத்தில் இருந்து கொண்டு உங்களை நீங்கள் மேம்படுத்திக் கொள்ள முடியாது என்பது தெளிவு. ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு அவசியமானவை மூன்று. அவை பரிவு, சமத்துவம் மற்றும் சுதந்திரம். இவற்றில் ஏதாவது ஒன்று இந்து மதத்திலிருந்து உங்களுக்குக் கிட்டும் என்று உங்கள் அனுபவத்தை வைத்துச் சொல்ல முடியுமா ?

தீண்டத்தகாதவர்களுக்கு சட்டம் வழங் கும் உரிமைகளைக் காட்டிலும் சமூக விடு தலையே தேவை. அந்த சமூக விடுதலை உங்களுக்குக் கிடைக்காத வரைக்கும் சட்டம் வழங்கும் எந்த உரிமைகளும் எதற் கும் பயன்படாது. சிலர் உங்களுக்கு உடல் சார்ந்த (Physical) சுதந்திரம் முழு மையாக இருக்கிறது என்று அறிவுறுத்த விளை வார்கள். உண்மைதான். நீங்கள் சட்டத்திற்கு உட்பட்டு எங்கு வேண்டுமானாலும் போகலாம், எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அந்தச் சுதந்திரத்தால் என்ன ஆகப்போகிறது ? ஒரு மனிதன் உடம்பினால் மட்டுமல்ல சிந்தனை களினாலும் ஆக்கப்பட்டவன். வெறும் உடல் சார்ந்த சுதந்திரத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது ?

சிந்தனைகளின் விடுதலையே அவசியமான விடுதலை. ‘உடல் சார்ந்த சுதந்திரம்’ என்பதன் உண்மை யான பொருள் என்ன ? அவன் தன் விருப்பத்திற்கேற்றபடி எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ள



உரிமை இருக்கிறது என்பது தானே ? ஒரு கைதியின் விலங்கு ஏன் கழற்றப்படுகிறது ? அதன் கோட்பாடு என்ன ? விலங்கு கழற்றப் பட்டதால் விடுதலை பெற்ற அவன் இனி தன் விருப்பப்படியே தன் நடத்தைகளை அமைத்துக் கொள்ளவும் தனக்கு இருக்கும் ஆற்றல்களைத் தடையின்றி முற்றும் முதலாகப் பயன்படுத்திக்கொள்ளவுமே. ஆனால் தன் சிந்தனைகளில் விடுதலையை அடையாத ஒருவனுக்கு உடல் சார்ந்த விடுதலை மட்டும் வழங்கப்பட்டால் அதனால் என்ன பயன் ? சுதந்திர சிந்தனையே உண்மையான விடுதலை.

சிந்தனைகள் சுதந்திரமானவையாக இல்லை யென்றால் கை விலங்கிடப்படாவிட்டாலும் அவன் அடிமைதான்! உயிரோடு இருந்தாலும் அவன் பிணம்தான்.

**(டிசம் 6 – அம்பேத்கர் நினைவு நாள்)**

**(தாயப்பன் அழகிரிசாமி மொழி பெயர்ப்பில் ‘தலித் முரசு’ வெளியிட்டுள்ள அம்பேத்கர் உரை நூலிலிருந்து)**

# மக்கள் கவிஞர் இன்குலாப் முடிவெய்தினார்



மக்கள் கவிஞர் இன்குலாப் (73) டிசம்பர் முதல் தேதி சென்னையில் முடிவெய்திவிட்டார். சமரசத்துக்கு இடமில்லாத கவிஞர். அவரது கவிதைகள் மக்களுக்காகவே பேசின. சென்னைப் புதுக் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியர். ஆனாலும் கவிஞராக, போராளியாக, நாடக ஆசிரியராக அவரது அடையாளங்கள் விரிந்து நின்றன. மார்க்சிய லெனினியத்திலும் பெரியாரி யத்திலும் அவர் ஈர்க்கப்பட்டார். 1996ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இன்குலாப் இல்லாமல் பெரியார் திராவிடர் கழக மேடைகள் இல்லை என்ற அளவுக்கு நெருக்கமாக இருந்தவர்.

17.9.2000ஆம் ஆண்டு சென்னை இராயப் பேட்டை சைவ முத்தையா முதலி 5ஆவது வீதியில் பெரியார் திராவிடர் கழகத்துக்கான தலைமை அலுவலகத்தை திறந்து வைத்தவர் கவிஞர் இன்குலாப். விளம்பர வெளிச்சங்களி லிருந்து ஒதுங்கி நின்ற உண்மையான மனிதர். தனக்கு வழங்கப்பட்ட கலைமாமணி விருதை 2009ஆம் ஆண்டு ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து விருதையும் ஒரு இலட்சம் ரூபாயையும் தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பியவர். ஈழம் சென்று தமிழீழ தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனை நேரில் சந்தித்தப் பெருமையும் அவருக்கு உண்டு. இஸ்லாமியராக பிறந்தாலும் சுய மத மறுப்பாளர் என்பது அவரது தனிச் சிறப்பு. கழகச் சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் காஞ்சி மாவட்டம் காட்டாங்கொளத்தூரிலுள்ள அவரது இல்லம் சென்று அவரது உடலுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். அவரது விருப்பப்படி அவரது உடல் செங்கல்பட்டு அரசு மருத்துவ மனைக்கு கொடையளிக்கப்பட்டது.

‘ஆனால்’ என்ற தலைப்பில தொகுக்கப்பட் டுள்ள அவரது கட்டுரை ஒன்றிலிருந்து சில பகுதிகள்:

*மூவேந்தர்களின் கொடிகள் தொடங்கி*
*மூவண்ணக் கொடியின்*
*இன்று வரைக்கும்*
*எல்லாக் கொடிகளும் ஏற்றப்படுவது*
*எந்த நூலால்?*
*பூணூலால்.*

எனவே யாரினும் கூடுதலாக இந்த ஜாதிக்கே அதிகாரம் குவிக்கப்பட்ட ஒரு பாரதம் வேண்டும். இந்தப் பார்ப்பனர்களுக்கு தனிமொழி எதுவு மில்லை. இவர்கள் தமிழ்நாட்டில் பிறந்து தமிழ் பேசினாலும் ஆத்மாவை வடமொழிக்கே அடகு வைத்தவர்கள்.

இந்தியாவில் எந்த மாநிலத்தில் பார்ப்பனர்கள் பிறந்தாலும் அவர்களின் சங்கமத் துறையாக சமஸ்கிருதம் இருக்கிறது. அவர்களை ஒன்றுபடுத்தும் கயிறாகப் பூணூல் இருக்கிறது.

அதனால் மொழிகளால் அடையாளம் காணப்படும் தேசிய இனங்களின் உரிமை, மேன்மை, விடுதலை என்பவை இந்தப் பார்ப்பனர்களின் அடிப்படை நலன்களுக்கு மாறானவை. எனவே இவற்றை இவர்கள் துச்சமாகக் கருதுகிறார்கள். சோவிலிருந்து எஸ்.வி.சேகர் வரை இந்த விழுமியங்கள் இழிவுபடுத்தத் தயங்குவதில்லை. ஒடுக்கப்பட்ட தேசிய இனங் களை மட்டுமல்ல உரிமைக்குப் போராடும் பாட்டாளி மக்களின் போராட்டங்களும் இந்தத் தன்னலவாதிகளால் கேவலப்படுத்தப்படுகின்றன. நியாயமான உரிமை வேட்கைகளுக்கு எதிராக இந்திய அரசு தொடுக்கும் தாக்குதல்களில், இவர்கள் பண்பாட்டுப் பிரிவுக்குத் தலைமை தாங்குகிறார்கள். தாக்குகிறார்கள். ஏனெனில் அனைத்துப் பண்பாட்டுத் தளங்களும் இவர்களது கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன.

புத்தர் காலத்திலேயே பேச்சு வழக்கு இழந்துபோன மொழி சமஸ்கிருதம். தமது சிந்தனைகளை மக்கள் பேசாத சமஸ்கிருத்தில் தொகுக்க வேண்டாம் என்று தம் மாணவர்களுக்குப் புத்தர் அறிவுரை கூறினார். இருந்தும் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தின் அடையாளமாகச் சமஸ்கிருதத்தைப் பார்க்கின்றனர். செத்துப் போன இந்த மொழியை அரியணையில் ஏற்ற முடியாததால் இதனுடைய சாயல் பெற்ற இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதில் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அனைத்துப் பார்ப்பனர்களும் ஒன்றுபட்டு நிற்கின்றனர். 1905இல், இந்து மத மீட்புவாதியான திலகர், சமஸ்கிருத மயமாக்கப்பட்ட இந்துஸ்தானிதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்றார். இன்று இந்தி மொழி தனது வளர்ச்சிக்கு முதன்மையாக சமஸ்கிருதச் சொற் களஞ்சியத்திலிருந்தே வேண்டிய சொற்களைப் பெற வேண்டும் என்றும் பிற இந்திய மொழிகளிலிருந்து தேவைப்பட்டால் பெறலாம் என்றும் இந்திய அரசியல் சட்டம் வழி காட்டிக் கொண்டிருக்கிறது. அதாவது திலகர் போன்ற இந்துமத மீட்புவாதிகளின் வேட்கையை இந்திய அரசியல் சட்டம் நிறைவு செய்து கொண்டிருக்கிறது.

இதனால் பிற தேசிய இனங்களில் மொழி, பண்பாடு முதலியவை அழிந்து போகலாம். உண்மையில் அவ்வாறு தான் நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் பெரம்பலூர் வட்டத்தில் குளப்பாடி கிராமத்தில் தீண்டப்படாத மக்கள், கிணற்று நீரைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக தண்ணீருக்குள் மின்சாரம் பாய்ச்சி இருந்தனர். தண்ணீர் குடிக்கச் சென்ற தலித் குழந்தைகள் மடிந்தார்கள். அப்போது கவிஞர் இன்குலாப் எழுதிய கவிதை இது.

*மனுசங்கடா நாங்க மனுசங்கடா*
*உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள*
*மனுசங்கடா நாங்க மனுசங்கடா*
*எங்களோட மானம் என்ன தெருவில கிடக்கா – உங்க*
*இழுப்புக்கெல்லாம் பணியறதே எங்களின் கணக்கா*
*உங்களோட முதுகுக்கெல்லாம் இரும்புல தோலா*
*நாங்க ஊடு புகுந்தா உங்க மானம் கிழிஞ்சு போகாதா*
*உங்க தலைவன் பொறந்த நாளு போஸ்டர் ஒட்டவும்*
*உங்க ஊர்வலத்துல தர்ம அடிய வாங்கிக் கட்டவும் – அட*
*எங்க முதகு நீங்க ஏறும் ஏணியாகவும் – நாங்க*
*இருந்தபடியே இருக்கணுமா காலம் பூராவும்*
*குளப்பாடி கிணத்து தண்ணி புள்ளய சுட்டது*
*தண்ணியும் தீயாச் சுட்டது – இந்த*
*ஆண்டைகளின் சட்டம் எந்த மிராசைத் தொட்டது*
*சதையும் எலும்பும் நீங்க வச்ச தீயில் வேகுது – உங்க*
*சர்க்காரும் கோர்ட்டும் அதுல எண்ணய ஊத்துது*
*எதை எதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்க – நாங்க*
*எரியும்போது எவன் மசுரப் புடுங்கப் போனீங்க – டேய்*
*மனுசங்கடா நாங்க மனுசங்கடா*
*உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள*
*மனுசங்கடா நாங்க மனுசங்கடா.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நாள்காட்டி தயார்!




நாள்காட்டியின் விலை : ரூ. 60

முன்பதிவு செய்வோருக்கு : ரூ. 50

தோழர்கள் விரைந்து முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். முன்பதிவு எண்ணிக்கைக் கேற்பவே நாள்காட்டிகள் அச்சிடப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்புக்கு : தபசி. குமரன், தலைமைக் கழகச் செயலாளர், பேசி: 9941759641

**(முதல் பக்கத் தொடர்ச்சி)**

அடுத்தக் கட்டத்தை நோக்கி நகராமல், 'பார்ப்பனிய பொருள் உற்பத்தி சமூகமாகவே' தேங்கியது. (பிரிட்டிஷ் ஆட்சி வரும் வரை இந்தியா சமூக மாற்றங்களுக்கு உட்படாது தேக்கமுற்றுக் கிடந்தது என்பதை காரல்மார்க்சும் சுட்டிக் காட்டியிருக்கிறார்)

- 'யாகங்கள்' நடத்தும் உரிமைகளை தங்கள் வசமாக்கிக் கொண்ட புரோகிதக் கூட்டம், அவற்றை எப்படி செய்ய வேண்டும் என்பதற்காக 'பிராமணங்களை' உருவாக்கியது. ஆனால், இந்த 'பிராமணங்களில்' எந்த யாகம் எப்படி நடத்தப்பட வேண்டும்? யாகங்கள் எவருடைய நலனுக்காக செய்யப்படுகின்றன என்ற விளக்கங்கள் ஏதுவுமில்லை. அதை தங்களின் 'இரகசிய சொத்தாக்கிக்' கொண்டார்கள். இதன் மூலம் தங்களை கடவுளுக்கு சமமாக உயர்த்திக் கொண்டார்கள்.

- இதற்குப் பிறகு கடவுளுக்கு யாகப் பொருள்களின் ஒரு பகுதியும், 'மனிதக் கடவுள்களாக' மாற்றிக் கொண்ட புரோகித கூட்டத்துக்கு ஒரு பகுதியும் பிரித்து, எல்லாவற்றையும் அவர்களே சுருட்டிக் கொண்டார்கள்.

- வேத புரோகிதக் கூட்டம் இப்படி படிப்படியாக தன்னை உயர்த்திக் கொண்டே வந்தபோது சமூகத்தில் எதிர்ப்புகளும் உருவாகித்தானே தீரும்? ஆம். எதிர்ப்புகள் வந்தன. எதிர்ப்புகளை எதிர்கொள்ள பார்ப்பனப் புரோகிதர் கூட்டம் கடவுளர்களுக்கும் மேலானவர்களாக தங்களை உயர்த்திக் கொள்ளத் திட்டமிட்டது. அதற்காக ஏற்கெனவே அவர்கள் உருவாக்கிய 'பிராமணங்களில்' சூழ்ச்சியாக இடைச்செருகல்களை செய்தார்கள். அதன்படி 'சத்பத பிராமணம்' என்ற ஒன்றை உருவாக்கி, 'வேத புரோகிதர் கடவுள்களுக்கு எல்லாம் கடவுள்; ரிஷிகள் மரபில் வந்தவர்கள்' என்று கூறிக் கொண்டார்கள். அதன்படி அரசர்களே வேத புரோகிதர்களை கட்டுப்படுத்த முடியாது. அரசர்கள் பதவியேற்கும்போது அந்தப் பதவியேற்புக்கு சடங்குகளை நடத்த வந்த புரோகிதர்கள் இப்படி கூறினார்கள், "மக்களே நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள், இவன் உங்களுக்குத்தான் அரசன், வேத புரோகிதர்களுக்கு அரசன் 'சோமன்' தான்" என்றார்கள்.

- வேதங்கள் - மனிதர்கள் உருவாக்கியவைதான் என்பதற்கு வேதங்களிலேயே சான்றுகள் இருக்கின்றன; ஆனாலும் பார்ப்பனர்கள் அதைப் புறக்கணித்து அவை கடவுள் உருவாக்கியவை என்றும், கடவுள்களே பிராமணர்கள்தான் என்றும் கூறத் தொடங்கினார்கள். மனு கூறினான்: "வேதங்கள் விவாதங்களுக்கு அப்பாற்பட்டவை. வேதத்துக்கு கீழ்ப்படிய மறுத்தால், சமூகத்தை விட்டு விரட்டப்படுவார்கள்."

- வேதங்கள் - தங்கள் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்பதால், கி.மு.7 அல்லது 8ஆம் நூற்றாண்டு வரை எழுத்து வடிவமாக்கும் வாய்ப்புகள் இருந்தும், வேத புரோகிதர்கள் அதைத் தவிர்த்தே வந்தார்கள். எழுத்து வரி வடிவம் உருவாகி அதைப் படித்தவர்கள் பயன்படுத்தத் தொடங்கிய பிறகும், 'வேதங்கள்' எழுதப்படவில்லை. வேதத்தை கேட்கும் 'சூத்திரர்' காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்கிறது மனுநீதி.

- மரப்பட்டைகளிலும் ஓலைகளிலும் எழுதப்பட்ட பழங்கால எழுத்து வடிவங்கள் அனைத்தும் புத்த மார்க்கத்தைச் சார்ந்தவையாக உள்ளன. பவுத்த துறவிகள் இயற்றிய 'வசிஷ்ட தர்ம சாஸ்திரம்' தான், முதன்முதலாக எழுத்து வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டது. அதுவரை வேதங்கள் பார்ப்பனர்களின் 'மூளை'யில் மட்டுமே பதிந்து கிடந்தது.

வேத காலத்தில் பார்ப்பனர்கள் நிலை நிறுத்திக் கொண்ட இந்த சூழ்ச்சிகளுக்கு எதிராக எதிர்ப்புகள் வரத் தொடங்கின.

அப்படி வேத பார்ப்பன மரபுக்கு சவால் விட்டது யார்?

**(தொடரும்)**

# 'மாவீரன் கிட்டு'




சமரசம் இல்லாமல் ஜாதி ஒடுக்குமுறை கவுரவக் கொலைகளை சாடுகிறது. 'மாவீரன் கிட்டு' திரைப் படம், 'அழகர்சாமியின் குதிரை', 'ஜீவா' போன்ற சிறப்பான படங்களை இயக்கிய சுசீந்திரன், இத்திரைப் படத்தை எழுதி இயக்கியுள்ளார். "தீண்டப்படாதவர்களின்" பிணங்களைக்கூட ஜாதி வெறியர்கள் தங்கள் வீதிகளில் எடுத்துச் செல்ல அனுமதிக்காத போக்கு இப்போதும் தொடருகிறது. அதே காட்சியை முன் வைத்து திரைப் படம் தொடங்குகிறது. சொந்த மகளையே தலித் இளைஞரை திருமணம் செய்த 'குற்றத்துக்காக' ஜாதி சமூகத்தின் ஒதுக்கலுக்கு உள்ளாகி விடுவோம் என அஞ்சி, காதல் மணம் முடித்து வந்த மகளையே கொலை செய்கிறார் ஆதிக்க ஜாதி தந்தை. ஆதிக்க ஜாதியில் பிறந்தாலும், ஜாதி எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவாக நின்று சொந்த மகளை 'தலித்' இளைஞருக்கு திருமணம் செய்ய முன் வருகிறார் ஒரு ஜாதி எதிர்ப்பாளர். அதன் காரணமாக ஜாதி ஆதிக்கவாதிகள் அவரை கொலை செய்து பழியை தலித் இளைஞர்கள் மீது போடுகிறார்கள். பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவராகும் இலட்சியத் தோடு கல்லூரியில் படிக்கும் 'தலித்' இளைஞர் கிட்டுவும் இந்த வழக்கில் சேர்க்கப்படுகிறார். இதற்கு காவல்துறை துணை ஆய்வாளரும் உடந்தை. காவல் நிலையத்தில் கிட்டு மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட நிலையில் அவரைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை. இறந்து விட்டாரா என்ற சந்தேகத்தில் மக்கள் அற வழியில் காவல் நிலையத்தை முற்றுகையிடுகின்றனர். அதற்கு தலைமையேற்று வழி நடத்துகிறார் சின்னராசு.

கிட்டுவின் கதி என்ன?

மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றி பெற்றதா என்பது மீதிக் கதை.

சின்னராசுவாக நடிக்கும் நடிகர் பார்த்திபன், படம் முழுதும் கருப்புச் சட்டையுடன் வருகிறார். படம் முழுதும் கச்சிதமான நடிப்பால் மனத்தில் இடம் பிடிக்கிறார். ஜாதி வெறிக்கு சாட்டையடி தரும் வசனங்கள், இமான் பின்னணி இசை படத்தின் காட்சிகளுக்கு உயிரூட்டுகிறது.

சர்வதேச கடல் பரப்பில் விடுதலைப் புலி தளபதி கிட்டு, கப்பலில் அய்ரோப்பிய நாட்டிலிருந்து ஈழத்துக்கு சென்றபோது இந்திய இராணுவம் அத்துமீறி சர்வதேச கடல் பரப்பில் கிட்டுவின் கப்பலை சுற்றி வளைக்க, கிட்டு கப்பலுக்கு தீ வைத்துக் கொண்டு தானும் தீயில் வீர மரணத்தை தழுவினார். அதே போல் தலித் இளைஞன் கிட்டு, ஜாதி எதிர்ப்புப் போராட்டத்தை ஏற்றுக் கொண்ட தலைவர் முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக தன்னைத் தானே அழித்துக் கொள்கிறார். எனவே 'மாவீரன் கிட்டு' என்று படத்துக்கு இயக்குனர் பெயர் சூட்டியுள்ளார்.

ஜாதி ஆதிக்கவாதிகளின் கோபத்துக்கு உள்ளாகலாம் என்பது குறித்தெல்லாம் கவலைப்படாமல், சமுதாயத்துக்குத் தேவையான கருத்தை துணிவுடன் கூற முன் வந்த இயக்குநர் சுசீந்திரனைப் பாராட்ட வேண்டும்.

ஜாதி எதிர்ப்பு கருத்தியலுக்கு வலிமை சேர்க்கும் திரைப்படம். ஓராயிரம் பொதுக் கூட்ட மேடைகளில் பேசும் கருத்துகளைவிட இத்தகைய திரைப் படங்கள் மக்கள் மன்றத்தில் வேகமான மாற்றங்களை உருவாக்கி விடும்.

**'கண்டு வந்தவன்'**

**விரைவில்**
**கழகத்தின்**
**புதிய மாத இதழ்**
**'நிமிர்'**

தமிழகத்தின் தலைசிறந்த
***சிந்தனையாளர்கள் –***
***எழுத்தாளர்கள் –***
***படைப்பாளிகள்***
***எழுதுகிறார்கள்.***
– விரிவான அறிவிப்பு
***அடுத்த இதழில்***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 9th December 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN